1993 ஏப்ரல் 23]

(இ) 2 கோடியே 33 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் இதில் வருமானம் வருகிறது.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 69,500 ஏக்கர் பராமரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்படவுள்ளது என்பதையும், இந்த சமூக நலக்காடுகள் எந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கட்டப் பணிகளாக 1988–89-லிருந்து 1991–92 வரையிலும் அதற்காக பராமரிப்புச் செலவுக்காக மொத்தம் 2,598 இலட்சம் ரூபாய் நாம் செலவு செய்திருக்கிறோம். அதேபோல 1992–93-க்கு மட்டும் 898 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது. ஏறத்தாழ பராமரிப்புக்கு மட்டும், அதாவது மரங்களை நட்டு தோட்டங்களை வளர்த்து பராமரிக்க மட்டும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 69,500 ஏக்கர் நிலங்களும் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். இந்திய நாட்டின் மூன்று மாநிலங்களுக்குத்தான் இந்த 'சீடா' என்ற திட்டத்தை அதாவது தமிழ்நாடு, பீகார், மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் மட்டும்தான் இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தியாவிலேயே சிறந்த இத்திட்டத்தைப் பயன்படுத்துகிற மாநிலமாகவும், சிறப்பான முறையில் சமூகக் காடுகளை வளர்க்கிற மாநிலம் என்று எடுத்துக்கொண்டால் தமிழகத்திலே இன்றைக்கு ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலேதான் என்பதைப் பாராட்டுகின்ற அளவுக்கு நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 445 திரு, எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. என். ஆர். சிவபதி கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

445—

போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ள விருதுகள்.

*11738—திரு. எச். எம். ராஜு :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலைப் பாதுகாப்பு விருது, தேசிய உற்பத்தித்திறன் விருது, இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் விருதுபோன்ற விருதுகளை தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் பெற்றிருக்கின்றனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## விவர அறிக்கை.

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் சாலைப் பாதுகாப்பு விருது, தேசிய உற்பத்தித் திறன் விருது இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் விருது போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளன. அந்த விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண். | போக்குவரத்துக் கழகத்தின் பெயர். | பெற்ற விருது. | அளித்த நிறுவனம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம். | 1. 1990–91 ஆம் ஆண்டிற்கு டீசல் சிக்கனத்திற்கு (போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான) முதல் பரிசு. | இந்தியன் ஆயில் கார்ப்பரேசன். |
| | | 2. 1990–91 ஆம் ஆண்டிற்கு லிட்டருக்கு அதிக கி.மீ. ஓட்டி முன்னேற்ற சதவீதம் இரண்டாம்பரிசு (சுழற்கோப்பை). | இந்திய பெட்ரோல் மற்றும் ஆராய்ச்சி மையம். |
| 2. | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம். | 1986–87 தேசிய உற்பத்தி திறன் விருது. | தேசிய உற்பத்திக் குழு. |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | 1987–88 தேசிய உற்பத்தித் திறன் விருது. | தேசிய உற்பத்திக் குழு. |
| | | 1989–90 டீசல் சேமிப்பு விருது. | இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம். |
| | | 1990–91— | |
| | | (1) டீசல் சேமிப்பு விருது. | இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம். |
| | | (2) தேசிய உற்பத்தித் திறன் விருது. | தேசிய உற்பத்திக் குழு. |
| | | (3) பேருந்து உற்பத்தித் திறனில் மிக உயர்ந்த முன்னேற்றத்திற்கு விருது. | அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு. |
| | | (4) பேருந்து உற்பத்தித் திறனில் உயர்ந்த முன்னேற்றத்திற்கு விருது. | அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு. |
| 3. | சோழன் போக்குவரத்துக் கழகம். | 1980–81 டீசல் செயல் திறன் முதலிடம். | இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆரய்ச்சி மையம். |
| | | 1984–85 உற்பத்தித் திறன் விருது. | தேசிய உற்பத்தித் திறன் குழு. |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

53-14 5—6

| | | | |
|---|---|---|---|
| | | 1985–86 டீசல் செயற்திறன் முதலிடப். | இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம். |
| | | 1985–86 உற்பத்தித்திறன் விருது டீசல் செயல் திறன் முதலிடம். | தேசிய உற்பத்தித் திறன் குழு. |
| | | 1990–91 டீசல் செயல் திறன் இரண்டாமிடம். | இந்தியன் ஆயில் கழகம். |
| | | 1990–91 டீசல் செயல் திறன் முதலிடம். | அரசு போக்குவரத்துக் கழகங்களின் குழுமம். |
| 4. | பாண்டியன் போக்குவரத்துக் கழகம். | 1983–84— டீசல் சிக்கனம் தேசிய விருது.<br>1984–85— டீசல் சிக்கனம் தேசிய விருது.<br>1985–86— டீசல் சிக்கனம் தேசிய விருது. | அரசு போக்குவரத்துக் கழகங்களின் குழுமம். |
| | | 1985–86— தேசிய உற்பத்தித்திறன் விருது. | தேசிய உற்பத்தித் திறன் குழு. |
| 5. | சேரன் பொறியியற் கழகம். | 1984— (1) முதலிடத்திற்கான கேடயம் மற்றும் சான்றிதழ். | தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம். |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | (2) மூன்றாமிடத்திற்கான இரு சான்றிதழ்கள். | தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம். |
| | | 1987—(1) முதலிடத்திற்கான கேடயம் மற்றும் சான்றிதழ். | தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம். |
| | | (2) மூன்றாமிடத்திற்கான ஒரு சான்றிதழ். | தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம். |
| | | 1988—(1) இரண்டாமிடத்திற்கான சான்றிதழ்கள் இரண்டு | தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம். |
| | | 1989—(1) முதலிடத்திற்கான கேடயம் மற்றும் சான்றிதழ். | தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம். |
| 6. | சேரன் போக்குவரத்துக் கழகம். | 1989-90 உற்பத்தித் திறன் விருது இரண்டாவது இடம். | தேசிய உற்பத்தித்திறன் குழு. |
| 7. | நேசமணி போக்குவரத்துக் கழகம். | 1986-87—தேசிய உற்பத்தித்திறன் விருது இரண்டாவது இடம். | தேசிய உற்பத்திக்கழகம். |

| | | | |
|---|---|---|---|
| | | 1987–88 தேசிய உற்பத்தித் திறன் முதலிடம். | சாலை போக்குவரத்து நிறுவன கூட்டமைப்பு. |
| | | 1987—தேசிய உடல் ஊனமுற்றோர் விருது. | உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு சங்கம். |
| | | 1988–89—டயர் பராமரிப்பு மற்றும் டயர் உழைப்பில் முன்னேற்றம் முதலிடம். | சாலை போக்குவரத்து நிறுவன கூட்டமைப்பு. |
| | | 1989–90—டயர் பராமரிப்பு மற்றும் டயர் உழைப்பில் முன்னேற்றம் முதலிடம். | சாலை போக்குவரத்து நிறுவன கூட்டமைப்பு. |
| | | 1986—மாநில பாதுகாப்பு விருது. | மாநில விருது. |
| ௬. | திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம். | 1983—உற்பத்தித் திறன் விருது. | மாநில விருது. |
| | | 1984—உற்பத்தித் திறன் விருது. | ஷை |
| | | 1985—வாகன உற்பத்தித் திறன் விருது. | ஷை |
| | | 1986—வாகன உற்பத்தித் திறன் விருது. | ஷை. |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| | | 1987—வாகன உற்பத்தித் திறன் விருது. | மாநில விருது. |
| | | 1988—வாகன உற்பத்தித் திறன் விருது. | ஷை |
| | | 1989—வாகன உற்பத்தி திறன் விருது. | ஷை |
| 9. | இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம். | 1989–90—பேருந்து இயக்க உற்பத்தி திறன் முதல்பரிசு மற்றும் இரண்டாம் பரிசு. | அனைத்து மாநில போக்கு வரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு. |
| | | 1990–91—இயக்க உற் பத்தித் திறனில் இரண்டாவது பரிசு. | தேசிய உற்பத்தி திறன் குழு. |
| 10. | தந்தை பெரியார் போக்கு வரத்துக் கழகம். | 1982–83 மற்றும் 1987 தேசிய உற்பத்திதிறன் விருது. | தேசிய உற்பத்தி திறன் குழு. |
| | | 1987-88, 1988–89 இயக்க செயல் திறன் இரண்டாவது பரிசு. | அனைத்து மாநிலப்போக்கு வரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு. |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| | | | |
|---|---|---|---|
| 11. | பல்லவன் போக்குவரத்துக் கழகம். | 1985-86—தேசிய உற்பத்தித் திறன். | தேசிய உற்பத்தித்திறன் குழு. |
| 12. | கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம். | சாலைப் பாதுகாப்பு விருது. | மாநில விருது. |
| | | 1988-89—தேசிய உற்பத்தி திறன் விருது. | தேசிய உற்பத்தித் திறன் விருது. |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த விவர அறிக்கையில் கிட்டத்தட்ட 12 போக்குவரத்துக் கழகங்கள் தேசிய அளவிலான விருதுகளைப் பெற்றிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். பொதுவாக இந்திய அளவில் நடந்த அனைத்து விருதுகளையும் நமது தமிழ் நாட்டைச் சேர்ந்த போக்குவரத்துக் கழகங்கள் தான் பெற்றிருப்பதாக நினைக்கிறேன். இருந்தபோதிலும், தமிழகத்தில் உள்ள மற்ற போக்குவரத்துக் கழகங்களும் – 12 போக்குவரத்துக் கழகங்கள் தான் தேசிய விருதுகளைப் பெற்றிருக்கின்றன– தேசிய அளவிலான விருதுகளைப் பெறுவதற்கு, அவர்களுக்கு ஊக்குவிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சியை அளிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது 16 போக்குவரத்துக் கழகங்களில் நான்கை தவிர 12 போக்குவரத்துக் கழகங்கள் இந்த விருதுகளை பெற்றிருப்பதை குறிப்பிட்டார்கள். அந்த விருதுகளை 1982-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அவை பெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்திய நாட்டில் 66 போக்குவரத்துக் கழகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக போன ஆண்டு 11 விருதுகளை வழங்குகிறபோது, 7 விருதுகளை தமிழகம் பெறுகிற அளவுக்கு, தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அவை பெற்று இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல இந்த ஆண்டும் அதே அளவுக்கு 7 விருதுகளைப் பெறுகிற அளவுக்கு நம்முடைய போக்குவரத்துத் துறை சிறப்பான முறையில் செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் சிறப்பாக அதற்கு பயிற்சி அளிக்க முடியாது. பேருந்து இயக்கத் திறன், ஒவ்வொரு பேருந்தும் நாள் ஒன்றுக்கு எவ்வளவு கிலோ மீட்டர் ஓடுகிறது என்பது, டீசலை சிக்கனப்படுத்துவது இதுபோன்ற நிலைகளை வைத்து தான் அவர்கள் அந்த விருதுகளை வழங்குகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பாக நடைபெறுகிற போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக எண்ணற்ற தேசிய விருதுகள்ளைப் பெறுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிற இந்தத் துறையில் விளையாட்டுப் போட்டியில் தேசிய விருதுகளைப் பெற ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தப்பட்ட அந்த விளையாட்டு நிகழ்ச்சி நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் பல ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. 1989–90ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த விளையாட்டு போட்டிகள் தேவையில்லை என்று நிறுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். இதற்கு பிறகு எதிர்காலத்தில் நீங்கள் சொல்கிற சிறப்பு விருதுகளைப் பெறுவதற்கு இந்தப் போக்குவரத்துத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 456, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. உங்களுடைய கேள்வி வருகிற போது நீங்கள் இருக்கையில் இருக்கவேண்டும். திரும்ப வந்து வேண்டுகோள் வைப்பது என்பதை எல்லா நேரத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

456—

பாலாறு—பொருந்தலாறு அணையிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை.

*9681—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், பாலாறு—பொருந்தலாறு அணையில் உள்ள மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை தற்போது செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் உற்பத்தியை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.